# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

காவலன்
சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | 4-50 |
| 3 மாத | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 4-ம் இல.


# கிறிஸ்தவஒற்றுமையின் தீவிரவளர்ச்சி

**"கிறிஸ்தவ ஒற்றுமையின் வளர்ச்சி துரிதமாகவில்லையென்று சிலர் கூறுகின்றார்கள். இது தவறு. சென்ற சில வருடங்களில் இவ்வொற்றுமை குறிப்பிடத்தக்க முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இதையிட்டு நாம் மகிழ்ச்சி அடையவேண்டும்."**

இவ்வாறு சென்ற18-ம்திகதி இங்கிலாந்திலுள்ள உவெஸ்ற்மினிஸ்ரர் ஆலயத்தில் பிரசங்கித்த கருதினால் ஹீனன் அடிகளார் கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில்:

"கிறிஸ்தவ ஒற்றுமையை ஓரளவுக்கு அடைந்துவிட்டோமென்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அடைந்துவிட்ட ஒற்றுமை சிலருக்குப் பற்றாததுபோலத் தோற்றலாம், எங்கேயோ ஏதோ பிழையாகிவிட்டது எனச் சிலர் எண்ணக்கூடும்

"அப்படி ஒன்றும் பிழைப் போகவில்லை. முழுக்கிறிஸ்தவ ஒற்றுமை சொற்பகாலத்தில் துரிதமாக அடைந்துவிடலாமென்று எதிர்பார்த்தவர்களுக்கு இவ்வளவு காலமும் செய்துமுடித்த வேலை ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கக்கூடும்.

"10 வருடங்களுக்கு முன் கிறிஸ்தவ சபைகள் ஒன்றையொன்று அலட்சியம் செய்தன. ஒவ்வொரு சபையும் தன்சபை மாத்திரமே தேவனுக்கு உவப்பானது என்ற எண்ணம் கொண்டிருந்தது.

"ஆனால் இப்போது இது எல்லாம் மாறிவிட்டது. இந்தமாற்றம் கடந்த இரண்டு மூன்று வருடகாலத்திலேயே நடந்திருக்கிறது. நம்பமுடியாத வேகத்தில் கிறிஸ்தவ ஒற்றுமை வளர்ந்து வந்திருக்கிறதுஎன்று குறிப்பிட்டார்.

## பயபிருவில் நிலைமை இன்னும் திருப்திகரமாயில்லை

நைஜீறியாவில், பயபிரூப் பிரிவினர் சரணாகதி அடைந்ததன் பின்னும் அங்குள்ள நிலைமை துக்கத்துக்கிடமாகவே இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. நைஜீறியாத் துருப்பினரின் கோபாவேசம் கதியற்றுக்கிடக்கும் பயபிரூ மக்களின் மேல் வேகமாக வீசுகிறதென்றும், துருப்பினரின் கொடுந்தன்மையினால் தர்மதொண்டுகள் முறையே நடைபெற முடியாதிருக்கிறதென்றும் செய்திகள் கூறுகின்றன. அதன் காரணமாக யுத்தகாலத்திற் போலவே இப்பொழுதும் பயபிரூ மக்கள் பல தொகையினராக இராணுவத்தாரின் கொடுமையினாலும் பசிப்பிணி வியாதிகளின் காரணத்தாலும் மடிகின்றனர் ஐரோப்பாக் கண்டத்திலும் அமெரிக்க கண்டத்திலும் உள்ள தர்மஸ்தாபனங்கள் பல தம்மால் கூடியளவு பணம், உணவு, மருந்துமுதலிய உதவிகள் செய்ய நைஜீறிய அரசாங்கத்துக்கு விண்ணப்பித்திருக்கின்றன. இவர்களின் உதவியளிப்பு முயற்சிகள் போதியளவு வேகம் இன்னும் கொள்ளாததே அந்நாட்டு இன்னல்களுக்குக் காரணமாயிருக்கின்றது.

# ஜனாதிபதி நிக்சனிடம்

## வத்திக்கான் பிரதானதூதுவர் செல்கின்றார்

வத்திக்கானின் வெளிவிவகார துணைக்காரியதரிசி வந்தனைக்குரிய பெனலி அதிமேற்றிராணியார் இவ்வாரத்தில் பிரதானமான ஒரு பிரயாணத்தை மேற்கொள்ளுகிறார். அவர் பிரயாணத்தின்போது, ஜனாதிபதி நிக்சனையும், கனடாப்பிரதமர் ரூருடோ அவர்களையும் மாத்திரமல்லாது ஐக்கியநாட்டு ஸ்தாபன பொதுக்காரியதரிசி யூ தான்ட் அவர்களையும உலகவங்கித் தலைவரையும் கண்டு முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்த இருக்கிறார். இவர் "உலக வறுமையைத் தீவிரமாகப் போராடும் முறைகளையும், பின்தங்கிய நாடுகளின் அபிவிருத்திமுறைகளையும், நீதி உலக சமாதானம் ஆகியவற்றையும் அலசி ஆராய்வார்" என வத்திக்கானில் கூறப்படுகிறது.

## பாப்பு கண்டிக்கிறார்

சென்றவாரம் பரிசுத்த தந்தை அளித்த பகிரங்கப் பேட்டியில் திருச்சபையில் தீவிரத்தன்மையான மாற்றங்களைப் புகுத்தக் கங்கணங்கட்டி நிற்பவர்களையும், 2-ம் வத்திக்கான்சங்க முடிவுகளை அமுல் செய்யும் வேலைக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்களையும் வன்மையாகக் கண்டித்தார். அவர் கூறியதாவது: "சென்ற காலங்களில் திருச்சபையில் நடைபெற்ற யாவற்றையும் திருத்தி அமைக்க விரும்புபவர்கள் எக்காரணத்துக்கு அப்படிக் கூறுகிறார்களோ தெரியவில்லை. நடந்துவந்த கருமங்களில் மிகச் சிலவே திருத்தி அமைக்கப்பட வேண்டியிருக்கையில் எக்காரணத்துக்காக யாவற்றையும் மாற்ற வேண்டும்? இது ஒருபுறமிருக்க, முறையாக நியமிக்கப்பட்ட வத்திக்கான் சங்கம் பல கருமங்களையும் அலசி ஆராய்ந்து முடிவு செய்த வகைகளை எதிர்த்து நிற்பது மடமைத்தனம் அல்லவா?"

## நிரீஸ்வரவாதிகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது?

வேதவல்லுனர் 60பேரான யேசுசபைக் குருமார் சென்றவாரம் ஆங்கில நாட்டில் றெயின்கில் என்னும் இடத்தில் ஒன்றுகூடி கத்தோலிக்கர் சித்தியுடன் எவ்வாறு நிரீஸ்வரவாதிகளுடன் தொடர்பு கொள்ளலாமென ஆராய்ந்து கொண்டனர். இக்கூட்டத்தின் முயற்சிக்கு வத்திக்கானின் ஆதரவு அமைந்திருந்தது என்பதை அதற்கு அங்கிருந்து அனுப்பப்பட்ட உயர் அதிகாரிகள் சான்றுபகர்ந்தனர். அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பியநாட்டிலிருந்தும் ஆலோசகர்கள் வந்திருந்தனர். ஒரு காலம் நிரீஸ்வரவாதிகளாயிருந்தவர்கள் பிறகாலங்களில் தேவனை ஒப்புக்கொண்ட பல திருஷ்டாந்தாங்கள் இருப்பதால் இப்பிரிவினருடன் வேண்டா வெறுப்பாக நடந்துகொள்வது பிழையாகுமெனும் அபிப்பிராயம் கூட்டத்தில் நிலவியது.

## திறமையான வேலைகளுக்கு பிரதமரின் பரிசுகள்

இலக்கியம், நாடகம், வானொலி நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய பலதுறைகளிலும் இவ்வருடம் இந்நாட்டுக்கல்வி கலாச்சார இலாகா பல பரிசுகளும் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. இதற்கென ஒரு பெருந்தொகையான பணத்தை ஒதுக்கி வைக்குமாறு பிரதமமந்திரி கட்டளை செய்திருக்கிறார். இத்துறைகளில் நாட்டமுள்ளவர்கள் இதுபற்றி இனிமேல் வரும் விளம்பரங்களைக் கவனிக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர்.

## சினொட் தேர்தல்

சென்ற வருடம் வத்திக்கானில் நடந்த மேற்றிராணிமாரின் சினொட்டில் செய்யப்பட்டமுடிவுகளுள் ஒன்று வத்திக்கானில் நிரந்தரமாக 'சினொட்' செயற்குழு நியமிப்பதாகும். இச்செயற்குழுவில் நியமனம் பெறுபவர்கள் சென்ற சினொட் சபையில் பங்குபெற்றவர்களே. வாக்களிப்பவர்களும் அம்மகாசபையினரே. ஆகவே உலகின் பல்வேறு இடங்களிலுமிருந்து வாக்குச்சீட்டுகள் வத்திக்கானில் வந்து சேர்ந்ததன்பின் இக்குழுவுக்குரிய 12பேரின் நாமங்களும், பரிசுத்ததந்தையால் குறிக்கப்படும் மூவரின் நாமங்களும் வத்திக்கான் அதிகாரிகளால் முறைப்படி வெளியிடப்படும்.

## குருமாரின் விரத்தத்துவத்தைப்பற்றி பாப்பரசர் மாத்திரமே முடிவுசெய்யலாம்

ஒல்லாந்து தேசத்தில் அண்மையில் நடந்த மேய்ப்பர் மகாநாட்டில் அதில் பங்குபெற்றவர்களுக்கு அத்தேச கருதினால் அலபிறிங்க் அடிகளார் செய்த பேருரையில், குருமாரின் விரத்தத்துவத்தைப்பற்றிய முடிவு பாப்பரசருடைய கையில் மாத்திரம் இருக்கின்றது என்பதைத் தெட்டத் தெளிவாக விளக்கிக் காட்டினார். பலவகைச் சினொட் சபைகள் யாவும் ஆலோசக சபைகளே என்றும் அச்சபைகள் கூறும் யோசனைகளைப் பரிசுத்த தந்தை சீர்தூக்கிப் பார்த்து, இறுதியான முடிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

## பாப்பரசரின் வேண்டுகோள்

உலகசமாதான தினமாகிய தைமாதம் முதலாம் திகதி பரிசுத்ததந்தை மத்தியகிழக்குப் போர்முனைத் தேசங்களாகிய இஸ்றயேல், யோர்தான், சிரியா, எகிப்து ஆகியவற்றுக்கு ஒரு விசேஷ சமாதான வேண்டுகோள் விடுத்துள்ளார்என வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன. பாப்பரசர் ஒரு புதிய சமாதான திட்டத்தைச் சமர்ப்பித்திருப்பதாக சில இத்தாலிய பத்திரிகைகள் கூறுகின்றன.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நண்பா! சிந்திப்பாயா?



யாழ் — "ஜெயம்"

● நண்பா! மனிதர்களால் நீ அருவருக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டிருப்பாய். கடைத்தரமானவன் என்று—கள்ளன் என்று இகழப்பட்டிருப்பாய். துன்புற்றவனாய்த் துயரச் சுமைகளால் துடிக்கிறாயா?

பூங்காவனத்தைப்பார்! அன்பும், புனிதமுமே உருவான அமலயேசு அங்கே அனுபவிக்கும் அவமானத்தையும், துயரத்தையும்பார்! அற்பமாசும் அணுகாத நேசயேசுவைக் கொடிய யூதசேவகர்கள் கத்திகளோடும், கயிறுகளோடும், காளவிளக்குகளோடும் சுற்றிவளைந்து கள்ளனைப்போற் கட்டியிழுத்துக்கொண்டு செல்கிறார்கள். மனுக்குலத்தின் தேவன் மௌனமாகச் செல்கிறார்.

● நண்பா! அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அல்லலுற்றிருப்பாய். இரகசியமான உன் குறைகள் பகிரங்கமாக்கப்பட்டதனால் இதயம்பிளந்து வருந்துகிறாயா?

அதோ! பிலாத்துவின் முன்னிலையில் அவன் தீர்ப்புக்காகக் காத்துநிற்கும் பெருமானைப்பார்! கலிலேயாநாடு முதல் யூதேயாநாடு வரை கலகம்செய்த மகா கொடிய கலகக்காரனை இதோ உம்முன்னிலையிற் கொண்டு வந்தோமென்று கொடும்பழி கூறி யூதர்கூட்டம் எக்காளமிடுகிறது. சத்திய சொரூபியான சருவேசுரனின் குமாரன் தலைகவிழ்ந்து நிற்கிறார்.

● நண்பா! நீசர்களுடன் உன்னை ஒப்பிட்டு, அவர்களிலும் நீ அற்பன், கொடியவன் என்று பிறர் தீர்மானம் செய்திருப்பார்கள். அவ்வார்த்தைகளால் உன்உதிரங் கொதிக்கிறதா? உள்ளம் வெடிக்கிறதா?

பரபாசின் அருகிலே மனுமகனைப்பார்! பரபாஸ் கள்ளர்களிற் பெருங்கள்ளன்; கொலைஞர்களிற் பெருங் கொலைஞன்; குழப்பக்காரர்களில் முதல்வன்; கொடியன்; வெறியன். அவன் மனுமகனோடு ஒப்பிடப்படுகிறான். மகா நீசனான பரபாசைவிட நேசயேசு அயோக்கியனென்று தீர்மானிக்கப்படுகிறார்.

● நண்பா! மடையனென்று உன்னைப் பிறர்மதிக்கிறார்களா? ஊமையனென்று உரைக்கின்றார்களா? பைத்தியக்காரனென்று பரிகாசம் செய்கிறார்களா? அவர்களின் பரிகாசத்தால், அவமதிப்பால் துயரப்படுகிறாயா?

ஏரோதன் அரண்மனையிலே இராசாதிராசனான யேசுநாதரைப்பார்! எல்லோராலும் அயோக்கியனென்றும், துர்த்தனென்றும், மிருகமென்றும் இகழப்பட்டு, ஏனஏரோதனால் பைத்தியக்காரனென்று தூற்றப்பட்டு, வெள்ளையங்கி போர்த்தப்பட்டுப் பரிகசிக்கப்படுகிறார்.

● நண்பா! நீ நிரபராதியாக இருந்தும், நீதிவழங்கப்படவில்லையே என்பதற்காக நெஞ்சம் கலங்குகின்றாயா?

உத்தமனென்று அறிந்தும் பிலாத்துவால் உத்தரவளிக்கப்பட்டு அவனுடைய முற்ற வெளியிலே கற்றூணிற் கட்டுண்டு கசையடிபடும் நீதிமானைப்பார்!



● நண்பா! உன்னிடம் உதவிபெற்றவர்கள் உனக்குத் துரோகம் செய்திருப்பார்கள். நீ நன்மை செய்தவர்கள் உனக்குத் தீமைசெய்கிறார்கள் என்பதை எண்ணிக் கலங்குகிறாயா?

அதோ! மலையின் உச்சியைப் பார்! நீளமரச்சிலுவையிலே இருப்பாணிகளில் தொங்கும் நேச மீட்பரைப் பார்

யூதர் கூட்டத்துக்கு யூதாஸ் என்ற சீஷன் அவரைக் காட்டிக் கொடுத்தான். அன்பான சீஷன் பேதுரு அவரை அறியேன் என்று மும்முறை மறுதலித்தார். கூடித்திரிந்த மற்றச் சீஷர்கள் ஓடியொழித்து விட்டார்கள்.

எல்லோராலும் கைவிடப்பட்ட இந்நிலையில், தனிமையில்தொங்கும் யேசுவின் திருஇருதயம் எப்படித் துடித்திருக்கும்! எவ்வாறு நொந்திருக்கும்! எண்ணிப்பார்!

● நண்பா! உலக துன்பங்களால், சிலுவைகளால் உள்ளம் வேதனையாற்றுது துடிக்கும்போது, நேசயேசுவின் திருப்பாடுகளை, அவர் அனுபவித்த மனோவேதனையை, மரண வாதையைச் சிந்தித்துப்பார்!

சிலுவைகளுக்கு அஞ்சாதே! சிலுவைமேல் ஆவலும், காதலுங் கொள். துன்பங்களைச் சகிப்பதைவிட வேறெதையும் தேடினால் மோசம் போவாய். ஏனெனில், சீவியம்முழுவதும் சிலுவைகளும், நிர்ப்பந்தங்களுமே சூழ்ந்திருக்கும். ஆகவே, உன்னைப் பரித்தியாகஞ் செய்து உன் சிலுவையைச் சுமந்துகொண்டு யேசுநாதரைப் பின்செல்வாயாக.

# குரவரின் நவீன முயற்சி

இங்கிலாந்து தேசத்தில் வெஸ்ற்கித என்னும் விசாரணைப் பங்குக் குருவானவராகிய ஜோண் நியூ போல்ட் சுவாமியார் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு கோவிலில் திருப்பலி பொதுவாக ஒப்புக்கொடுப்பதைவிட வகுப்பறையில் ஒப்புக்கொடுப்பது கூடிய பயனை அளிக்குமென்ற கருத்துடையவராயிருக்கின்றார். ஆகவே எப்போது வசதி ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் முறைக்குமுறை வெவ்வேறு வகுப்பறைகளில் திருப்பலி ஒப்புக்கொடுத்து வருகின்றார். ஆசிரியரின் மேசை திருப்பீடமாக மாறுகின்றது. திருவஸ்திரம் அணியும்போது ஒவ்வொன்றாக எடுத்தெடுத்து அவற்றின் கருத்துக்களைச் சுருக்கமாக வர்ணிப்பார். அவ்வகுப்பு மாணவ மாணவிகளே பூசைப்பரிசாரகர். பெண்பிள்ளைகள் வகுப்பறைப் பூசையில் உதவ ஏற்றுக் கொள்வார். பூசையின்போது கொடுக்கப்படும் பிரசங்கம் பள்ளிக்கூடப்பாடம்போல் கரும்பலகை, வர்ணச் சோக்கு முதலியனவற்றால் விளக்கம் பெறுகின்றது. பொவாக மாணவர் இத்தகைய திருப்பலியை மிகவும்விரும்புகின்றனராம்,

## தேவாலயகட்டங்கள் எவ்வாறிருக்கவேண்டும்

ஆங்கிலநாட்டுக் கருதினால் ஹீனன் அடிகளார் அந்நாட்டுக் கத்தோலிக்க கட்டிட வேலைச் சஞ்சிகையொன்றில் வருங்காலக் கத்தோலிக்க ஆலயக் கட்டிடவேலைகளின் தன்மையைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது:

● வழிபாட்டு முறைகள் புகுத்தப்பட்டு நிரந்தர நிலைமையை அடைந்திருப்பதனால் கத்தோலிக்க தேவாலய பீடப்பகுதிகளை நிரந்தரமான தன்மையில் அழகாக அமைப்பது நன்று. பெரும்பாலும் எமது தேவாலயப் பீடங்களின் முன் தற்காலிக முறையில் மரத்தினால் செய்யப்பட்ட நொய்தல் வேலைகளை அகற்றிவிடுவதை நான் விரும்புகிறேன்.

● மேலும் இந்நாட்டிலேயும், பிறநாடுகளிலேயும் வறுமை தாண்டவமாடும் இந்நாட்களில் பிரமாண்டமான கம்பீரதோற்றமுடைய ஆலயங்களைக் கட்டி எழுப்புவது அவசியமாக இருக்கவில்லை. தேவாலயங்கள் அழகாய் வகுக்கப்பட்டு, அவற்றுக்குரிய உபயோகத்தை அளிப்பதற்கு அளவுக்கு மிஞ்சிய செலவு செய்வது ஆகாது.

# இன்பமே வா

(யோ. சைமன் — வவுனியா)

கடவுள் தம் அன்புச்செறிவில் தமது சாயலாகவே மனிதனைப் படைத்தார். இன்பவனத்தில் இருத்தினார். சகல சௌகரியங்களையும் கொடுத்தார். திருப்தி கண்டானா மனிதன் இல்லை? "படைத்தவரைப்போல் வருவாய்" என்று சாத்தான் விட்ட சூழ்ச்சியால் ஆசைக்கு இடங்கொடுத்தான். அழிவைத் தேடிக்கொண்டான். மனித சந்ததிக்கே இழிவைத் தேடிவைத்தான். பூவுலகமே பரலோகமாகத் திகழும் என்று எண்ணிய மனிதன் சாவு, நோவு, துன்பம், வன்மம் யாவற்றிற்கும் இலக்காகினான். ஆனால், கடவுளின் சாயலான ஆன்மா இன்பத்தில் பூரணத்துவத்தைக் கண்டடையத் தேடுகின்றது. தன் முயற்சியால், தன் புத்தியால் இன்பத்தையடையப் பிரயத்தனப்படுகின்றான். கற்காலத்தைப் பொற்காலமாக மாற்ற எண்ணினான். விஞ்ஞான இறக்கை அணைத்தான். மதிமண்டலத்திலும் குதிவைத்துவிட்டான். அவன் ஆசித்த இன்பம் பூரணப்பட்டதா? இல்லை.

பரமனின் அன்பினால் அவருக்கென்றே படைக்கப்பட்ட இதயம் பரமனை அணுகாதுபோயின் திருப்தி கொள்ள முடியாது. உலக இன்பம், உடல் இன்பம், மது இன்பம், மாது இன்பம் யாவும் மனித புத்தியை மங்கச் செய்கின்றது. இறை அன்புக்கென்றே ஆசிக்கும் மனித ஆன்மா முட்செடியுள் அகப்பட்ட விதைபோல் ஆகின்றது. பேரின்பத்தில் இன்புறவே மனிதனை உருவாக்கிய கடவுள் அவனின் இதயதாகத்தைத் தணிக்கும் வண்ணம் தம் சுதனையும் அனுப்பினார். சுதனும் தம்மையே வெறுமையாக்கி மனுவுருவெடுத்து வந்தார். மனிதன் முத்தி அடையும் வழிகளைக் கற்பித்தார் அருட்கொடைகளை அள்ளியிறைத்தார் "உலகின் வழிநானே, உலகின் உயிரும், ஒளியும் நானே" என்று கூறி ஆதரவு கொடுத்தார். "கடவுளைப் போல் ஆவாய்" என்றதும் ஆசைகொண்ட மனிதனுக்கு நித்திய இன்பமாக வாழும்படி தேவசுபாவத்தில் பங்கு கொள்ளும் சலுகையும் கிடைக்கச் செய்தார். தம்மைப் பின்சென்றவர்களை வழிநடத்த, தவறியவற்றைச் செவ்வனே அமைக்கப் பரிசுத்த ஆவியின்ஒளியில் திருச்சபையை உண்டாக்கினார். "உலகம் முடியும் வரையும். நான் உங்களோடு இருப்பேன்; நரகத்தின் வாசல்கள் மேற்கொள்ளாது என்று உறுதி கூறினார்.

பூவுலகில் உள்ள யாவும் மனித தேவைக்கே உண்டாக்கப்பட்டது; உண்மை தான். ஆயினும் அதுவே கதியென்றெண்ணி அவற்றில் பூரண பற்றுவைத்து அலைந்து திரிந்து அழிந்தொழிந்து போவது மடமை. யாவற்றுக்கும் மேலாகக் கடவுள் காட்டிய வழியில் அவரைத் தேட வேண்டும். தேவநேசம், சகோதர அன்பு, பொறுமை, தூய்மை, தியாகம் முதலிய தெய்வீகப் பண்புகள் மனிதனிடத்தில் தோன்ற வேண்டும். பேதங்கள், பாகுபாடுகள், பிரிவினைகள், பொறாமைகள் அகலவேண்டும். மனித சமூகத்தைப் பிரித்துவிடக்கூடிய பகை, பழிக்குப்பழி என்ற தீய வழக்கங்கள் மறைய வேண்டும்.

பரலோக வாழ்வே மனிதனுக்கு அழியா இன்பத்தைக் கொடுக்கும். அதற்காக இவ்வுலகிலுள்ள யாவற்றையும் முற்றாக அசட்டை செய்வதல்ல. ஆன்மீக வாழ்விற்கு இவ்வுலகே அடிப்படை ஆயினும் மனுக்குலம் இவ்வுலக காரியங்களில் பற்றுக்கொண்டு பரலோக இராச்சியத்தைக் கைநெகிழ விட்டால் மனிதனின் வாழ்க்கையில் யாது பயன்? "சருவேசுரனுடைய இராச்சியத்தையும் நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள், அப்போது மற்றவையாவும் உங்களுக்குக் கூட்டிக் கொடுக்கப்படும்" என்று நற்செய்தி கூறினார் கிறீஸ்து. இதனாலன்றோ கோடிக்கணக்கான பக்தர்கள் உற்றார், பெற்றார், நண்பர், சொந்தநாடு யாவற்றையும் துறந்து உலகம் எட்டுத்திக்கும் பணியாற்றி வருகின்றனர். கிறீஸ்துவின் ஒளிஎங்கும் பிரகாசிக்கவேண்டுமென்ற ஒரேஇலட்சியம் கொண்டு பிரயத்தனப் படுகின்றனர். தம் உயிரையே பலியாக்குகின்றனர். கிறீஸ்துவின் அன்பில்தான் உண்மை இன்பம் உண்டென்பதைக் கண்டறிந்தனர். கிறீஸ்துமூலமே பேரின்பத்தைக் காண முடியும். அதுவே என்றும் மங்கா ஒளியுள்ள பரலோக இன்பம்.

### நன்றித்துதி

யேசுவின் திரு இரக்கத்தினாலும், பரிசுத்த செபமாலைமாதா, புனித யூதாததேயு, புனித அந்தோனியார், இவர்களின் மன்றாட்டாலும், எனக்குப் பூரண சுகமும், நான் கேட்டவைகளும் அனுகூலமாயிற்று. நேர்த்தியின்படி நன்றி கூறுகிறேன்.

வங்காலை, ஓர் அடியாள்.

* * *

### நன்றித்துதி

"கிறிஸ்து இராஜாவின்" இரக்கத்தினாலும், புனித அந்தோனியாரின் புதுமையாலும், புனித யூதாததேயுவின் சலுகையாலும், திருக்குடும்பத்தின் வேண்டுதலினாலும் நான் கேட்ட காரியம் கிடைக்கப்பெற்றேன், நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்

பக்தர்.

கொட்டாஞ்சேனை,


* * *

### நன்றி

திருக்காயங்களைத் தம்மேல் கொண்டவரும் பல புதுமைகளை ஆற்றி அண்மையில் ஆண்டவனடி அடைந்தவருமான புனித பியோ அடிகளாரிடம் நான் இரந்து விழைந்த மன்றாட்டுக் கிடைக்கப் பெற்றேன். இவர் புகழ் புவியெங்கும் புகழப்படுவதாக.

நுவரெலியா, T. B.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!

மாசி மாதம் இரண்டாந்தேதி காணிக்கை மாதாவின் திருநாள். தேவதாயார் திவ்விய யேசுவை அவர் பிறந்த 40ஆம் நாள் ஜெருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டு சென்று, அவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தா. அந்த ஞாபகதினம் திருச்சபையால் கொண்டாடப்படுகிறது. அன்று மெழுகுதிரிகள் ஆசீர்வதிக்கப்பட்டு மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம் நடைபெறுகின்றது. தேவ தாயாரும் சூசை அப்பரும் ஒருசோடி மாடப்புருவைக் காணிக்கை கொடுத்துத் திவ்வியபாலனைச் சிமியோனிடம் இருந்து மீட்டனர். பிள்ளைகளே! நீங்களும் உங்கள் இருதயங்களை யேசுவுக்கு ஒப்புக்கொடுத்து உங்களைப் பசாசிடம் இருந்து காப்பாற்றவும், பாவத்தை விலக்கி நடக்கவும் உங்களுக்கு உதவிசெய்யும்படி தேவதாயாரை இத்தினத்திலே மன்றாடுங்கள்.

— அண்ணா

## முடியுமா?


ஒரு கூடையிலே 6பழங்கள். 6 பேருக்கு ஆளுக்கொன்றாக அதைக் கொடுக்கவேண்டும். கூடையிலும் ஒன்று இருக்கவேண்டும். முடியுமா?

[விடை வேறு பக்கம்]

# வேலு குற்றவாளியல்ல!

—(ச. கு.)—

கோபு, சோமு, வேலு, முத்து என்ற நான்கு வியாபாரிகள் பஞ்சு வியாபாரம் செய்து வந்தார்கள். அவர்கள் இருந்த இடத்தில் அநேக எலிகள் உலாவிக்கொண்டிருந்தன. அவ்வெலிகள் அவர்களுடைய பஞ்சு மூட்டைகளை நாசஞ் செய்துகொண்டிருந்தன. எனவே, அந்நான்கு வியாபாரிகளும் அவ்வெலிகளை அழிப்பதற்காக ஒருபூனையை வளர்க்கத் தீர்மானித்தார்கள்.



பூனையை வளர்ப்பதற்கு முன்பு அந்நால்வரும் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்கள். அதாவது, அப்பூனை அந்த நான்கு பேர்களுக்கும் உதவி செய்கிறதல்லவா? எனவே, பூனையின் நான்கு கால்களையும் ஒவ்வொருவருக்கும் ஒருகால்வீதம் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு அடையாளம் போட்டுவைத்தார்கள்.

பூனைவந்து ஒருமாதகாலமாயிற்று. அவர்களுடைய இடத்திலுள்ள எலிகளெல்லாம் ஒழிந்துபோயின. ஆகவே, அந்நான்கு வியாபாரிகளும் மிக்க சந்தோஷத்துடன் இருந்தார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் பூனையின் முன்காலில் பலத்த காயம் ஏற்பட்டது எனவே, அக்காலுக்கு உரிமையாளனாகிய வேலு என்ற வியாபாரி அக்காலில் ஏற்பட்டகாயத்தை ஆறவைப்பதற்காகத் துணிக்கந்தையைத் தேங்காய் எண்ணெயில் தோய்த்துக் கட்டிவிட்டான். பூனைக்கு ஒரே ஆனந்தம். தன்னுடைய எசமானன் செய்த உதவிக்காக அவனுக்குப் பெரும் உதவி அளிக்க வேண்டுமென்று பூனைக்குத் தோன்றியது.

அன்றிரவு எதிர்பாராதவிதமாகப் பூனை எலியைப்பிடிப்பதற்காக அடுப்பங்கரைக்குச் சென்றது. பூனையின் காலில் எண்ணெய்த் துணி கட்டியிருந்ததினால் அடுப்பிலுள்ள தீயானது உடனே அத்துணிக்கந்தையைப் பிடித்துக்கொண்டது. இதைக்கண்ட பூனை தன்னுடைய எசமானர்களை நோக்கி ஓடிவரும்போது வழியில் அடுக்கிவைத்திருந்த பஞ்சு மூட்டைகளின்மேல் அக்கந்தைத் துணிகளிலுள்ள தீ பரவிற்று. உடனே எல்லாப் பஞ்சு மூட்டைகளும் தீ பிடித்துச் சாம்பராயின.

பஞ்சு மூட்டைகள் நாசமடைந்ததைக்கேட்ட அந்நான்கு வியாபாரிகளும் ஓடிவந்தனர். அப்பொழுது காலில் அடிபட்டபூனை தீயின் காயத்தினால் நொண்டிக்கொண்டு அவர்களை நோக்கி வந்தது. உடனே மூன்று வியாபாரிகளும் வேலுவை நோக்கி: "நீதான் இப்பஞ்சு மூட்டைகள் நாசமடைந்தற்குக் காரணமாக விளங்குகின்றாய்; ஏனென்றால், உன்னுடைய அடையாளக் காலில் எண்ணெய்த்துணி கட்டியிருந்ததினால் அப்பூனையின் காலில் அடுப்பிலுள்ள தீயானது பற்றிக்கொண்டது. எனவே, நீதான் அப்பஞ்சு மூட்டைகள் நாசமடைந்த தொகையைக் கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள். ஆனால், வேலு அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு நால்வருக்குமிடையில் பலத்த சண்டை உண்டானது.

அப்பொழுது அவ்வழியாகச் சென்ற பெரியவர் ஒருவர் அவர்களுடைய சண்டையைப் பார்த்து: "என்ன விஷயம்?" என்று கேட்டார். உடனே மூன்றுபேரும் தங்களுடைய நியாயத்தை எடுத்துக்கூறி, வேலுதான் இந்த நஷ்டஈட்டிற்குப் பொறுப்பாளி எனக் கூறினார்கள்.

பெரியவர் அம்மூவரையும் நோக்கி: "நீங்கள் வேலுமேல் குற்றம் சொல்வது மிகவும் தவறு; ஏனென்றால், அவனுடைய அடையாளக் காலில் காயம் ஏற்பட்டிருந்ததால் அவன் துணிக்கந்தையை வைத்துக் கட்டினான். ஆனால், உங்கள் மூவருடைய அடையாளங்களான பூனையின் மூன்றுகால்கள் நன்றாக இருந்ததால்தான் பூனை நொண்டிக்கொண்டு அடுப்பங்கரையை அடைந்தது. உங்களுடைய அடையாளங்களான அப்பூனையின் மூன்று கால்கள்தான் அப்பஞ்சுமூட்டைகள் நாசமடைந்ததற்குக் காரணமாக விளங்கின. எனவே, நீங்கள் மூவருந்தான் அப்பஞ்சு மூட்டைகளின் நஷ்டஈட்டிற்குப் பொறுப்புடையவர்கள்" என்று கூறிவிட்டு அகன்றார். அப்பெரியவருடைய தீர்ப்பைக்கேட்ட மூவரும் வெட்கித் தலைகுனிந்தனர்.

## அருமைத் தம்பி

அறிவு வேண்டுமா அருமைத் தம்பி!
குறளைப் படித்து குணமாய் நடப்பாய்.

மறுமை தனிலும் மலரும் வாழ்வு
திருக்குறளில் உண்டு அருமைத் தம்பி.

உனது வாழ்வில் உள்ளம் மகிழ
மனக்கவலை ஒழிப்பாய் அருமைத் தம்பி.

உனதுநாட்டை சிறக்க வைக்க
மனதில்பதிப்பாய் மலரும் குறளை

உனதன்பு[illegible]
இன்பம் காண்பாய் அருமைத் தம்பி.

## லூர்துநகரில் அன்னை தந்த செய்தி




1858 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 11ஆம் நாள் முதல் ஆடித்திங்கள் 16 ஆம் நாள்வரை அமல அன்னை மரியாள் பெர்னதெத் அம்மாளுக்கு 13 முறை தரிசனை தந்தாள். அப்போது அவள் பேசிய வார்த்தைகள்:

"15 நாட்களுக்கு ஒருமுறை தயவுசெய்து இவ்விடத்திற்கு வருவாயா?"

"இவ்வுலகத்திலே நீ சந்தோஷமாக இருப்பாய் என உனக்கு வாக்களிக்க மாட்டேன்; ஆனால் மறு உலகில் நீ இன்பம் அனுபவிப்பாய்."

"பாவிகளுக்காக இறைவனிடம் மன்றாடு."

"தபம், தபம், தபம்!"

"அந்த ஊற்றுக்குச் சென்று, அதிலிருந்து வரும் நீரைக் குடி; உன்னையும் சுத்தமாகக் கழுவு."

"பாவிகளுக்காக ஒறுத்தல் செய்யுமுறையாகத் தரையை முத்தமிடு."

"குருக்களிடம் சென்று இவ்விடத்தில் ஓர் ஆலயம் கட்டவேண்டுமென்று தெரிவி."

"இவ்விடத்திற்கு மக்கள் திருயாத்திரையாக வர வேண்டுமென விரும்புகிறேன்."

"இன்று காலையில் நீ என்னைப் பார்க்கவில்லை; ஏனென்றால் இவ்விடத்தில் நான் தரிசனை தருவதைக் கவனிக்க அருகதையற்ற பலர் இவ்விடத்தில் இருந்தார்கள்; இக்கெபியருகில் இரவுபூராக இருந்து இவ்விடத்தை மாசுபடுத்தினார்கள்.

## குரங்குக்குச் சிறைவாசமா?

ஆச்சரியம்! ஆனால், உண்மை! ஆம்... கொலம்பியாவில் பரோடா என்பது ஒரு பகுதி. இங்கே ஓர் எசமான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார்.



அவர் வளர்த்து வந்த குரங்கு அவரைக் கடித்துவிட்டதாம். அதற்காக அக்குரங்கைச் சுட்டுவிட வேண்டும் என்று நீதிபதியிடம் முறையிட்டார். நீதிபதிக்குக் குரங்கின்மீது பச்சாத்தாபம் ஏற்பட்டதோ என்னவோ!

குரங்கு மனிதனைக் கடிப்பது இதுதான் முதல் தடவையானதால் இக்குரங்கைச் சுடவேண்டியது அவசியமல்லவென்றும், ஆனால், குற்றம் புரிந்த குரங்குக்கு ஆறு மாதக் கடுங்காவல்தண்டனை விதிப்பதாகவும் கூறித் தீர்ப்புக்கூறினார் நீதிபதி. இது மட்டுமல்ல, ஆறு மாதத்திற்குப் பின்னர் விடுதலைபெற்று வரும் குரங்கை அதன் எசமானர் விரும்பினால் அவரிடமே அனுப்பப்படும். இல்லையேல் மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பப்படும் என்றும் தீர்ப்பு வழங்கினர்.

## என் காதல் கீதம்

யேசு என் காதலன்
அன்பு மயமே
ஆனந்த தேவா
இன்ப யேசுவே
ஈடில்லா தற்பரனே
உத்தமனே
ஊட்டமளிக்கும் என்விருந்தே
என்தேவனே, என்தேவனே
ஏதமிலா ஐயனே
ஒப்பற்ற
ஓதவரிய
ஔடதமே, என் நாதா
நமோ! நமோ!!

— அந்தோனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருச்சபையானது சமமற்ற சமுதாயம் என்பதை யாவரும் அறிவர். அதில் சிலர் கட்டளையிடவும், மற்றவர் கீழ்ப்படியவும் இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். இரண்டாம் வகுப்பினர் பொதுநிலையினர்; முதல் வகுப்பினர் குருக்கள்." இவ்வாறு எழுதினார் பதினாறும் கிறகோரியார் என்ற பாப்பு. அவர் எழுதி இன்று நூற்றிருபத்தாறு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

பொது நிலையினரைப் பற்றிக் கூறவந்த இரண்டாம்வத்திக்கான் சங்கம் ஒரு பெரிய புரட்சியை உருவாக்கிவிட்டது. திருச்சபை என்னும் பேருண்மையில் பொதுநிலையினர் வகிக்கும்இடம் இன்று முற்றிலும் வேறு. இறைவனின் திருச்சபையில் இன்று 'மக்களாட்சி' எனும் கொள்கையே தலைதூக்கி நிற்கிறது. 1957 இல் பொதுநிலையினர் பணியை ஆராய்வதற்காகக் கூடிய உலகமாநாட்டில் திருச்சபை அதிகாரிகள் 'சள சள' வென்று பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தனர். ஆனால், பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் கூடிய அதே மாநாட்டில் பொதுநிலையினர் அதிகம் பேச ஆரம்பித்தனர். திருச்சபை அதிகாரிகளோடும், குருக்களோடும் சம உரிமை கொண்டாட ஆரம்பித்தனர். மாநாட்டுத் தலைவரான திரு. வெரோனீஸ்கூறினார்: "திருச்சபை வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் எடுக்கக்கூடிய தீர்மானங்களில் பொது நிலையினரும் பங்கெடுக்க வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானமும் இதுவே. அதற்கு இப்போது காலம் வந்துவிட்டது." பாப்பானவரும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நிகழ்த்திய சொற்பொழிவில், "பொது நிலையினன் நிலையைத் திருச்சபை பறைசாற்றியிருக்கிறது ...... திருச்சபைக் காரியங்களில் அவனும் பொறுப்பேற்கத் தகுதியுடையவன் என்பதையும் கூறியிருக்கிறது" என்றார்.

### சங்கப் புரட்சி

இரண்டாம் வத்திக்கான் சங்கம் அப்படிஎன்ன புரட்சி செய்துவிட்டது? பாரம்பரையாக வந்த திருச்சபைப் போதனையைத் தலைகீழாக மாற்றிவிட்டதா? போதனை புதிதன்று; கொள்கை புதிதன்று. நோக்கிய கோணமே புதிதானது. "கொப்பர் நீகசு புரட்சி" என்றே கூறலாம். இதனால் திருச்சபையில் ஒரு புதிய மனப்பான்மை மொட்டு விட்டிருக்கிறது. திருச்சபையின் எதிர்காலம் இம் மனப்பான்மையைப் பொறுத்தே இருக்கும். திருச்சபையின் அதிகாரிகளுக்கும் ஏனைய விசுவாசிகளுக்கும் இடையே நிலைபேறான ஒரு கூட்டுறவு ஏற்படுவதே அம் மனப்பான்மையின் பேறுபலனாகும்.

### மாற்றமா, ஏமாற்றமா?

திருச்சபை பற்றி ஆராய எழுந்த திட்டக் குழுவின் முதல் நகலில் முறையே

- . திருச்சபைப் பேருண்மை,
- . திருச்சபையின் அதிகாரம்,
- . இறைமக்கள் ஆகிய தலைப்புக்கள் காணப்பட்டன.

ஆனால், குழுவின் விவாதம் ஆரம்பிக்குமுன் மேற்கண்ட வரிசை முறையை மாற்றி, 'இறைமக்கள்' என்ற மூன்றாவது தலைப்பை இரண்டாவதில் புகுத்திவிட்டனர். இதுவே இன்று நாம் திருச்சபையில் கண்கூடாகக் காணும் புரட்சிகளுக்கெல்லாம் அடிப்படையானது என்று கூறலாம். இம் மாற்றத்தைப்பற்றிச் சங்கத் தந்தையர் முதலில் அவ்வளவு ஆர்வம் காட்டிக்கொள்ளவில்லை அதனால் ஏற்படும் விளைவுகளை அவர்கள் அப்போது அறிந்திருந்தால்? திரிதெந்தின் பொதுச் சங்கம் பிரிவினைச்சபையாரின் கூற்றுக்கு மாறாக இருந்ததால், பொது நிலையினரின் நிலை 'கீழ்ப்படிதல்', 'பணிவுடைமை' என்ற வரம்பினுள் அடைபட்டுக் கிடந்தது.

### வேறுபாடா? கூறுபாடா?

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபை அதிகாரிகளாகிய ஆயர், பேராயர், குருக்கள் ஆகியோருக்கும் பொதுநிலையினருக்கும்இடையேயுள்ள வேறுபாட்டை ஆராயப்புகவில்லை. யாவரும் விசுவாசிகள்தானே? ஆகவே, ஞான அதிகாரிகளுக்கும் பொது நிலையினருக்கும் இடையே உள்ள பொதுக் கூறுபாட்டையே வலியுறுத்தியது வத்திக்கான் சங்கம். திருச்சபையில் ஒவ்வொருவரும் பெறுகிற திருமுழுக்கு தூய ஆவியைப் பெற்றுக் கொடுக்கிறது. இத் தூயஆவியின் வல்லமையால் விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் மறையுடலைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். திருமுழுக்கு என்ற திருவருட்சாதனம் இறை மக்களைக் குருகுலமாகவும், பரிசுத்தமாக்கப்பட்ட ஆலயமாகவும் மாற்றுகிறது. அதன் மூலமாகவே இறைமக்கள் அனைவரும் கிறிஸ்துவின் குருத்துவத்திலும் அவருடைய தீர்க்கதரிசன வரத்திலும், அரசர் தன்மையிலும் பங்கு பெறுகின்றனர் (சங்க ஏடுகள் — "இறை மக்கள்" அத். 2; எண் 10–12; அத். 3, எண் 34–36). எனவே, ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற இரு வகுப்பாருக்குத் திருச்சபையில் இனி இடம் கிடையாது. அது வேறுபாட்டைக் குறிப்பதாகும்.

### உடல் ஒன்று அங்கம் பல

குருகுலமான இறைமக்கள் ஓரேமக்கள். ஆனால், அவர்களிடையே வேலை பல; கடமைகள் பல. குருக்கள் பெறும் குருத்துவம் இறை மக்களின் சேவைக்காகக் கிறிஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்டது. இறைமக்கள் அனைவருடைய பொதுக் குருத்துவத்திலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. இது திருச்சபையின் ஆட்சிப் பொறுப்பை உணர்த்தும் கூறுபாட்டைச் சார்ந்ததாகும். ஆயினும், திருச்சபை ஆட்சி இறைமக்களுக்கு அப்பாற்பட்டதன்று; இறைமக்களாகிய சமூகத்திலிருந்து அது தோன்றுகிறது. இறை மக்களின் பொதுப் பணிக்கே அது ஏற்பட்டது.

"திருச்சபையில் பணிகள் வெவ்வேறாயினும் குறிக்கோள் ஒன்றே. கிறிஸ்து தம் பெயராலும் வல்லமையாலும் தம் அப்போஸ்தலர்களுக்கும் அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோருக்கும் போதகப் பணியையும், தூய்மைப் படுத்தும் அலுவலையும் ஆட்சிப் பொறுப்பையும் அளித்தார். கிறிஸ்துவின் குருத்துவ, போதக, ஆளும் அலுவல்களில் பங்குபெறும் பொதுநிலையினர், இறைபணியில் தமக்குரிய அலுவலை ஆற்றுகின்றனர்; இறைமக்கள் அனைவரிடமும் அது ஒப்படைக்கப்பட்டுள்ளது" (ச. ஏ. 'பொதுநிலையினர்' அத். 1, எண் 2b).

ஆயர் பணியும் குருத்துவ பணியும் பிறர்நலப் பணிகள். ஆயரும் குருக்களும் தம் சொந்த நலனுக்காக அவற்றை ஆற்றுதல் கூடாது; அதனால் அவர்கள் எத்தகைய பெருமையும் படத் தேவையில்லை.

"திருவரம் பெற்றுள்ள பணியாளர் (ஆயரும்குருக்களும்) தம் சகோதரர்களின் சேவைக்காக உள்ள

**சங்கப் புரட்சி**

னர். அதனால் இறைவனின் திருக்கூட்டத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரு பொது நோக்கத்திற்காக உழைக்கவேண்டும்; அதன் மூலம் எல்லோரும் கரை சேருவர்" (ச. ஏ. 'திருச்சபைபற்றிய அறிக்கை' அத். 3, எண். 18a).

இதிலிருந்து திருப்பணியாளரும் இறைவனின் கொடைகளைப்பெற்றுள்ள பொதுநிலையினரும் திருச்சபையின் காரியங்களில் தத்தமக்கே உரிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது; இரு சாராரும் கூட்டுப் பொறுப்பாளிகள். வத்திக்கான் சங்கத்திற்கு முன்னும் பின்னும் உள்ள திருச்சபை அமைப்பைப் பின் வரும் வரைவு விளக்கும்.

**திரிதெந்தின் சங்கத்திற்குப் பின்**

↑
கிறிஸ்து
↓
திருச்சபை ஆட்சியாளர்
↓
பொதுநிலையினர்

**வத்திக்கான் சங்கந்திற்குப் பின்**

↓
கிறிஸ்து
↓
இறைமக்கள்
↓ ↓
திருப்பணியாளர் பொதுநிலையினர்

### உரிமையும் உண்டு, கடமையுங் கூட

திருச்சபை வளர்ச்சியில் பொதுநிலையினருக்கு உரிமை மட்டுமன்று, கடமையும் அவர்கள் தோள்மேல் ஏறியிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறது. இது பெரும் புரட்சியே. இப் புரட்சியை ஏற்கத் திருப்பணியாளரும் தயாராக இல்லை, பொதுநிலையினரைக் கேட்கவா வேண்டும்? திருப்பணியாளர், "திருச்சபையின் தீர்மானங்களைப் பொதுநிலையினர் கையில் ஒப்படைக்க, அவர்கள் என்ன அவ்வளவு பக்குவம் அடைந்துவிட்டனரா? பார்க்கலாம் ..." என்று முணுமுணுக்கின்றனர். பொதுநிலையினரோ, "நமக்கு இருக்கிற வேலை போதாது! சாமியார் இருக்கவே இருக்கிறார். அவர்எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்" என்று கூறித் தங்கள் கடமையைத் தட்டிக் கழிக்கப் பார்க்கின்றனர். புதிதாகக் கிடைக்கப் பெற்ற கடமை, உரிமை 'பாகப்பிரிவினை'யில் சில காலத்திற்கு நிச்சயமற்ற நிலைமை நீடித்துவரலாம். புதிதாகத் தோன்றிய உரிமை உணர்ச்சியிலும், கடமை பிடர்பிடித்துத் தள்ளுகிறது என்ற உற்சாகவேகத்திலும் பொதுநிலையினர் வரம்புமீறிச் செல்லலாம். 1967-ம் ஆண்டு அக்டோபர் 15-ல் கூடிய அனைத்துலகப் பொதுநிலையினர் பணி மாநாட்டில் இத்தகைய சூழ்நிலை உருவானது. அப்போது பாப்பானவர் மாநாட்டில் குறுக்கிட்டு, "ஆள்வோர் ஆளப்படுவோர் எனும் போட்டி இங்கு கிடையாது. திருச்சபையில் பணிகள் பலவாயினும் நோக்கம் ஒன்றே" என்ற கருத்தொலிக்க, பொதுநிலையினர் பணியைப் பற்றி வத்திக்கான் சங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையை நினைவுபடுத்தினார். திருச்சபைகளின் உலகப் பேரவை சார்பில் (World Council of Churches) மாநாட்டில் பார்வையாளராய் இருந்த டாக்டர் வெப்பர் என்பவரும், பொதுநிலையினர் காட்டிய தீவிர முற்போக்குக் கொள்கையைப் பார்த்துப் பிரமித்துப்போனார். "திருச்சபையின் உள்விவகாரங்களில் பொதுநிலையினருக்கு நீங்கள் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? இதனால் திருச்சபையின் பொது ஆராதனையில் பொதுநிலையினரின் பங்கெடுப்பும், உலகில் (அவர்கள் காட்டவேண்டிய) கிறிஸ்துவவாழ்வும் பாதிக்கப்படாதா" என்று கேட்டிருக்கிறார்.

### நமக்கில்லை அது

இந்தியத் திருச்சபையைப் பொறுத்தஅளவு இந்த ஆபத்து வெகு சீக்கிரம் வர முடியாது. குரு பக்தியிலும் இறைபக்தியிலும் பல்லாண்டு காலமாக ஊறிக்கிடக்கும் விசுவாசிகள், சிலோ ஏரித் தண்ணீரை வானவன் வந்து கலக்கக் காத்திருக்கும் பிணியாளிகளைப்போல் பொறுமைசாலிகளாய் இருக்கும்வரை பட்டி தொட்டிகளில் உள்ள திருச்சபைகளில் புரட்சி எதுவும் சமீபத்தில் வராது என்பதை எதிர்பார்க்கலாம். மாறாக, இந்திய திருச்சபையில் பொதுநிலையினரைத் தட்டி எழுப்ப விசுவாசம் என்ற தண்டாயுதங்கள் பல தேவையாயிருக்கின்றன. இந்திய மண்ணில் அரசியல் விடுதலைப் போரை முழக்கிய பாரதியார் போன்று திருச்சபையிலும் ஒரு பாரதியார் தோன்ற வேண்டும்.

### உங்களையே உணர்ந்துபாருங்கள்

திருச்சபைப் பாரதியார் தோன்றுவது இருக்கட்டும். ஆனால், அதற்குமுன் உங்களையே நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். பொதுநிலையினர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் பல வரங்களைப் பெற்றவர். அவை தூயஆவியானவரிடம் இருந்து வருபவை. புனித சின்னப்பரே கூறுகிறார்: "பொது நன்மைக்காக ஒவ்வொருவருக்கும் ஆவியானவர் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். ஒருவருக்கு ஆவியின் வழியாக ஞானமும், அதே ஆவியின் வழியாக இன்னொருவருக்கு அறிவும், வேறொருவருக்கு அதே ஆவியின் வழியாக விசுவாசமும் அருளப்பட்டுள்ளன" (1கொரி. 12 : 7–11).

— மணியம்

(யே. திரு இருதயத் தூதன்)

---

✠

**வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல்**

அவர்கள்

பரமபதமடைந்த

## 9-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 12—2—1889 மறைவு: 4—2—1961.

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

இவரது ஆன்ம சாந்திக்காக ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். முடிவில்லாப் பேரொளி இவர் மீது ஒளிர்வதாக.

சில்லாலை. அன்பு மனைவி.

7/70.

---

### நேர்த்தி

அல்லைப்பிட்டி மேற்கு அர்ச். அந்தோனியார் பெயரால் கேட்டுக்கொள்ளப்பட்ட மன்றாட்டு உடன் நிவிர்த்தியானபடியால் நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

[6/70] ஓர் பக்தன்

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

தேற்றாத்தீவு அர்ச். யூதாததேயு பெயரால் 16வருடங்களாக விரும்பிக் கேட்டுவந்த விண்ணப்பம் கைகூடியபடியால் மீண்டும் அவர் வரப்பிரசாதம் பெருகும்படி பிரார்த்திக்கிறேன்.

ம. ரோசம்மா

அல்லைப்பிட்டி. [5/70]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருவேசுரனுடைய மாதாவே!

பரிசுத்தர், அளவில்லாத வல்லபமுள்ளவர், பூரண நன்மைத்தனமானவர். அவரே சர்வேசுரன். அவருடைய தனிப்பட்ட இலட்சணங்களால் அவர் நித்திய பரமானந்தமானவர். எனினும் அவரின் சித்தத்திலே மனிதர் எல்லோரும் சதாகாலம் இருந்தார்கள் — இருக்கிறார்கள் — இருப்பார்கள். ஏனெனில் அவர் காலத்துக்கு அப்பாலானவர். அவருடைய ஞானமும், நன்மைத்தனமும், வல்லபமும் அளப்பரியது. அளப்பரிய சிருட்டிகளை அவருடைய சிருட்டி அளக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் அவருடைய அன்பு அவரை மனிதனாக அவதரிக்கச் செய்ததால் தேவன் மனிதனானார்; புனிதன் மனிதனானார். மனிதனைப் புனிதனாக்கச் சித்தமானார். மரணத்துக்குட்பட்ட மனிதனுக்கு நித்தியசீவியம் அளிக்கச் சித்தமானார். நித்திய வேதனைக்குஆளான மனிதனை நித்தியபேரின்பத்துக்குஆளாக்கச் சித்தமானார். அவரால் சிருட்டிக்கப்பட்டு அவரால் அலங்கரிக்கப்பட்ட மரியாளைக் கிருபைக் கடாட்சத்துடன் பார்த்தார். அவள் அவருக்கு மிகவும் பிரியகுமாரனைப் பெற்றெடுக்கக் கூடியவளாய் இருந்தாள். அவளின் தாழ்மை அவரை வென்றது. "வார்த்தையானவர் மாமிசமானார்." என்றும் எங்களுடன் வாசமாய் இருக்கிறார். மரியாள் சருவேசுரனுடைய மாதா! இதுவே நத்தார் தினம். தேவதாயார் தேவன் அளிக்கும் பரிசுத்தத்திற்கும், வல்லமைக்கும், பரமானந்தத்திற்கும் பூரணஉரித்துப் பெற்றாள். அந்த வல்லபத்தாலேயே அவள் இப்பொழுது தேவனுடன் மனிதர் எல்லோரையும அரசாளுகிறாள். எல்லோரையும் தேவன் அளிக்கும சீவியத்திற்கும், அதோடுசேர்ந்த பரமானந்தத்திற்கும் சேர்ப்பதே அவளின் ஆட்சியின் நோக்கமாகும்.

## அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வந்தார்

தேவ் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்த மரியாளைத் தாயாகத் தெரிந்தெடுத்தார் தேவன. அதே சித்தத்திற்கு மாமிசமான வார்த்தையானவர் என்றும் கட்டுப்பட்டிருக்கிறார். எனவே அவரின் தாழ்மையில் அவருடைய தெய்வீக மகிமை புலனாகிறது. தேவதாயாரும், புனித சூசைமுனிவரும தேவனின் கட்டளைப்படியே தேவபாலனைத் தேவாலயத்தில் காணிக்கை வைக்கிறார்கள். யேசு ஆபிரகாமின் தேவன்; ஈசாக்கின் தேவன. ஆபிரகாமுக்கு முன் தான் இருக்கிறேன் என்றார் கிறிஸ்து. பிதாப்பிதாவாகிய ஆபிரகாம் தனது அருமை மகனாகிய ஈசாக்கை கடவுளுக்குப் பலியாக்கப் பூரணமாகச் சித்தமானார். அப்படியே மரியாளின் மகனாகிய கிறிஸ்து கடவுளின் உன்னதத்திற்குரிய பலிப்பொருளாகச் சித்தமானார். எனவே தேவதாயாரும், புனித சூசையப்பரும் அவரைத் தேவாலயத்தில் காணிக்கை வைக்க அவரே சித்தமானார். கிறீஸ்துவுக்கும் மரியாளுக்குமிடையில் தேவசித்தத்தைச் செய்வதில் முரண்பாடு இல்லை. ஏனெனில் அவள் பிதாவிற்கு மிகவும் பிரியகுமாரத்தியும், சுதனுக்கு மிகவும் பிரிய தாயுமாயிருந்தாள். எனவே மரியாளைச் சருவேசுரனுடைய மாதாவென அழைக்கிறோம்.

## அவரைத் தேவாலயத்தில் கண்டடைந்தனர்

கிறீஸ்து தேவனும் மனிதனுமாய் இருக்கிறார். அவருடைய ஞானம் கடவுள் அளவானது. தேவாலயத்திலிருந்து வீடுதிரும்பின மரியாளும், சூசையும் அவரைக் காணாதபடியால் தேவாலயத்திற்குச் திரும்பிச் சென்றனர். அங்கே அவர் வேதபாரகர்களுடன் விவாதித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். பிதாவின் வீட்டைப்பற்றி ஒரே நோக்கமான யேசு எப்படி அவரின் இராச்சியத்தைப் பற்றியும், அவரின் பிரசைகளைப் பற்றியும் கரிசனை குறைந்தவராய் இருப்பார்? ஞான சீவியமான தேவனின் வார்த்தைகளையும், சத்தியங்களையும் எப்படிச் சிதைவடைய விடுவார்? எனினும், அவர் மரியாளுடனும், சூசையுடனும் வீடுதிரும்புகிறார் பிதாவின் சித்தத்தை மாத்திரம் நிறைவேற்ற அவதாரமான

**பி. ஜே. அமிர்தநாயகம்**

தேவன் மரியாளுக்குக் கீழ்ப்படியச் சித்தமானார். மரியாவின் சித்தம் பிதாவின் சித்தத்திற்குள் அடங்கியது. பிதாவுக்கு மரியாளின் சீவியம் என்றும் மிகப் பிரியமாய் இருந்தது. சுதனுக்கும் அப்படியே. எனவே அவளைச் சரியாகச் சருவேசுரனுடைய மாதாஎன அழைக்கிறோம்.

## வியாகுலமாதா சிலுவையடியில் நின்றாள்

வார்த்தையானவர் மாமிசமாக மரியாளின் சம்மதம் இன்றியமையாததாய் இருந்தது. அவள் அவருக்கு என்றும் அடிமையாக இருந்தாள். சிலுவை பரியந்தம் அவள் அவருக்கு அடிமை. அவர் அவளைப் பூரணமாக ஆட்கொண்டு விட்டார். அவளின் மாசில்லாத தன்மை அதிலேயே அடங்கி விட்டது. தன் பிதாவின் சித்தத்தைச் செய்பவர்களே தனது தாயும் சகோதரர்களும்என்றார் யேசு. அவர் எல்லாம் முற்றிற்று என்று சொல்லும் பொழுதும் தேவதாயார் அவரின் தாயாகச் சிலுவை அடியில் நின்றார். அவ்வேளை புனித அருளப்பரைத் தனது மகனாகஏற்றுக்கொண்டார். அதே நேரம சிலுவையடியில் இறைமக்கள் அனைவருக்கும் தாய்மை யுரிமையைக் கிறீஸ்துவில் பெற்றுக் கொண்டார். ஏனெனில் கிறீஸ்துவின் வழியாகவே சகலதும் படைக்கப்பட்டன.

## நற்கருணைநாதரின் மாதா

பாவத்தால் சகலமனிதரும் அனாதைகளானோம். எங்களின் நித்திய சீவியமாகிய பிதாவை இழந்துவிட்டோம். பிதா நித்திய நல்லாயன். அவர் தனது ஞான மந்தைகளை இழக்க மாட்டார். அவரின் ஏக குமாரனின் பெறுபேறுகளால் எல்லோரையும் தனது வீட்டிற்குக் கொண்டுசேர்ப்பார். அவரின் பூரண பராமரிப்பே அவருடைய அளவில்லாத அன்பு. கிறீஸ்துவின் அழியாத நித்திய குருத்துவத்தால் எமது மாதாவாகிய திருச்சபை உண்டாக்கப்பட்டது. அவர் இன்றும் பலிப்பொருளும் குருவுமாய் திவ்வியநற்கருணையில் இருக்கிறார். அவரோடு அவருடைய தாயாரும் இன்றும் நித்தியத்தில் ஐக்கியமாய் இருக்கிற. எனவே சருவேசுரனுடைய மாதாவை முறையாக நற்கருணை மாதாஎன அழைக்கலாம். எப்படிக் கானான் தேசத்துக் கலியாணத்தில் அவ தேவனிடம் பரிந்துபேசி மணமக்களை மகிழ்வுறச் செய்தாளோ அப்படியே நற்கருணைநாதரிடம் செல்வோர் எல்லோரையும் அவள் மகிழ்வுறத் தவறாது செய்வார். அவள் அன்றும் இன்றும் சர்வேசுரனுடைய மாதா. எனவே தேவதாயாரின் மக்கள் அனைவரும் அவவின் மாலையில் அடங்கிய ஐம்பத்துமூன்று பொன்மணிகளாகிய பிரியதத்த மந்திரத்தை இடைவிடாதுபாடி அவவைச் சருவேசுரனுடைய மாதாவென்று பாராட்டுவார்களாக. சருவேசுரனுடைய மாதா எங்கள் மாதாவாயிருக்கிறா! என்ன ஆனந்தம்!! பரமானந்தமாகிய தேவனின் தாயார் எங்களது தாயார். ஏன் கவலை கிறீஸ்தவனே? நித்திய சீவியமில்லாத அனாதைகளாகிய மனிதருக்கு நித்திய பிதாவும் மாதாவும் தேவன் அளிக்கச் சித்தமானார். அவரின் சித்தத்தை என்றும் பாராட்டுவோம். "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள்பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக." அவரின் பூரண பராமரிப்பு எல்லோரும் அடைய உழைப்போமாக. "உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுமாப்போல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக." விண்ணுலகில் இருப்போர் அனுபவிக்கும் சமாதானத்தை மண்ணுலகோரும் பெற பிரார்த்திப்போமாக. விண்ணுலகோரின் அப்பத்தைச் சகலமக்களும் தகுந்த முறையில் அனுபவிக்க நற்கருணைநாதரின் மாதாவை வேண்டுவோமாக.

# நான் உங்களைச் சிநேகித்ததுபோல் ...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் பின்பற்றவேண்டுமென்றே அவர்விரும்புகிறார். அதையே அவர் நம்மிடம் திரும்பத் திரும்பக் கேட்கிறார். ஆத்தும தாகமே அவரது அன்பு வேட்கை. ஒவ்வொரு கிறீஸ்தவனையும் அவர் கேட்பது அன்பு வாழ்வே. நாம் முழுமனமாய் அவரைநேசித்தால் அவர்நிமித்தம் பிறரை நேசிப்போம். பிறரை உண்மையாகவே முழுமனமாய் நேசித்தால் நாம்அறிந்த, நாம் சுகித்த அந்த அன்பின் தெய்வத்தை, சிநேகத்தின் அன்பரை, இரக்கத்தின் மீட்பரை, இரட்சணியத்தின் ஜீவ ஊற்றைத்தரும் தெய்வீகரைப் பிறரும் அறியவைப்போம்.

— நாநன்

# உறவுகொண்ட அன்பர்

(அன்பே வா. எ. மெட்டு)

அன்பே தா அருளே தா தா தா
கருணை என்றொரு வடிவினிலே
காசினி வந்தாய் அன்பே பார்
உள்ளம் நாடும் காதலிலே
உன்னையே தந்தாய் உணர்வாய்த்தான் (அன்பே தா.)

*

**ஆன்மா :**

நீ இணைந்தால் என்னிதயமே நிறைவுகொள்ளும்
போய்மறைந்தால், என்புத்தியோ மங்கிக் கொள்ளும்
இன்னலுமே அலைமோதும், இன்பமேதான்
சிதறித்தள்ளும்
உலகினில் உரமுமில்லை, உடல் வலிமைப் பயனுமில்லை
நிம்மதி வாழ்விலில்லை (அன்பே தா.)

*

**அன்பர் :**

எண்ணியெண்ணி என் வாஞ்சையால் நீ எரிந்தால்
உந்திக் கொண்டே உன்னுரிமையும் எனக்களித்தால்
அறத்தினிலே பின்னிச்சென்று, பிறரன்பை
அழைத்துவந்து
என்பிரதிமை விளங்கவைப்பீர். விழுமுலகம்
எழுந்துநிற்க
வீரத்திற் குயிரளிப்பேன் (அன்பே தா.)

*

**ஆன்மா :**

சுவாசம்தந்த, மந்தையில் ஒன்றோ நான்
இரணம் தந்த லட்சுமிக் கன்னியோ நான்
யாருமில்லை கேளுமப்பா ; உணர்ச்சியிலே
உருவெடுத்து
உம்மிதயத்தில் வீடமைத்தே, பாசந்தான் பற்றிநிற்கும்
நியதிக்குப் பிறந்தவள் நான் (அன்பே தா.)

*

**அன்பர் :**

அடைக்குந்தாள் அன்புக்கும் உண்டோ சொல்
தாரந்தான் தாய்க்குப்பின் தகமையே செல்
ஈடில்லா இறையன்புக் கெதுவோதான் நிகரோசொல்
இதற்காக ஈனனானே(ன்) மோனவழி சொரிந்து
நின்றேன்
முத்திக்குப் பணிபுரிவாய் (அன்பே தா.)

*

**ஆன்மா :**

நும்மடி யிணைக்கு, அர்ச்சனைக் குழந்தைகள்தான்
நும்முடி ஒளிக்கு முத்தான மணிவியுந்தான்
அருளாண்மையிலே மூழ்கிநின்று அருணனென
உலகாள
உன்னணியெனக் கணவனெழ, அறிவுஞானம்
பெருகிவர
ஆண்டிலே வழிதிறப்பீர் (அன்பே தா.)

*

**அன்பர் :**

படைத்து விட்டேன். படைப்பெல்லாம் உனக்காக
விதித்து விட்டேன் உன்னையே எனக்காக
உச்சமெல்லாம் உளவறிந்தாய் உந்தனையே
அடிமறந்தாய்
பாழ்நிலை எதற்காக நல்மனந்தான் நடுநிலையாம்
நாடிடு சமாதானமே (அன்பே தா.)

— சு. மேரி பிரான்சிஸ்கா.

# ஓர் எச்சரிக்கை

எத்தகைய அரசியற் கட்சியாயிருந்த போதிலும், மரியாயின் சேனையின் ஆதிக்கத்தையோ அதன் மண்டபங்களையோ அதற்கு உதவி, அரசியல் விவகாரங்களில் ஈடுபட வேண்டாமென இலங்கை மரியாயின்சேனை செனற் அதிகாரபீடம் இந்நாட்டின் மரியாயின் சைனியத்தாருக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றது. மரியாயின் சேனையின் அலுவல்கள் ஆன்ம கருமங்களே தவிர அரசியற் கருமங்களல்ல என்பதை மனதிற் பதித்திருக்குமாறு செனெற்றஸ் கேட்டிருக்கின்றது.

# மேலும் ஒரு புதுத் தொண்டு

பெல்ஜியதேச கருதினால் சுயென்ஸ் அடிகளாருக்குப் பரிசுத்ததந்தை மேலும் ஓர் புதுவேலையைப் பணித்திருக்கின்றார். அவரே இனிமேல் தேவதாயாரின் பெயரினால் நடாத்தப்படும் மகாநாடுகளுக்குப் பொறுப்பாளியாவார். இவ்வேலை 23-ம் அருளப்ப பாப்பரசரினால் 1959-ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்து வரும் மரியாயின் மகாநாடு யூகோசிலேவியா தேசத்தில் சாகுறப் நகரில் 1971-ம் ஆண்டு நடத்தப்பட இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — மாசி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | வருடத்தின் 4-ம் ஞாயிறு | [ப] |
| 2 | திங்கள் | ஆண்டவரின் காணிக்கை | [வெ] |
| 3 | செவ்வாய் | தினப் பூசை | [ப] |
| 4 | புதன் | இலங்கை நாயகி தினம் | [வெ] |
| 5 | வியாழன் | புனித ஆகத்தா | [சி] |
| 6 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 7 | சனி | ,, | [ப] |

சத்தியவேத பாதுகாவலன்

# நாடும் நாமும்

ஒரு நாட்டின் பிரசைகளாயிருக்கும் அனைவருக்கும் தம் நாட்டைப் பொறுத்த மட்டில் சில அடிப்படையான கடமைகள் உள. அவற்றை அவர்கள் நிறைவேற்றியே ஆகவேண்டும். தத்தம் சொந்த விருப்பு வெறுப்புக்கள் எதுவாயிருந்த போதிலும் குடிமையின் இக்கடமைகளை அலட்சியம் செய்வோரை நல்ல பிரசைகள் என்று கூறமுடியாது.

தாம் வாழும் நாட்டில் உண்மையான பற்றுடையவர், தேசிய நலனில் அக்கறையுடையவர் இந்த அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதோடு திருப்தியடைந்து விடமாட்டார். தன்னுடைய வேலை முடிந்துவிட்டது. பிறர் எக்கேடு கெட்டாலென்ன என அலட்சிய பாவத்துடன் வாழ்வது நாட்டுப்பற்றுக்கும் விரோதமானது. கிறிஸ்தவ பண்பாட்டிற்கும் விரோதமானது.

சில காலத்துக்குமுன் இது குறித்துக் கத்தோலிக்கர்மீது பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. பிறநாட்டிலிருக்கும் ஒரு தலைவருக்கு அமைந்து நடப்பதால் தம்நாட்டின் மட்டில் பூரண விசுவாசம் அற்றவர்கள், நாட்டின் நலனை முதன்மையாகக் கருதாதவர்கள் என்ற சந்தேக மனப்பான்மை இலங்கையில் மட்டுமல்ல, சில மேற்கத்திய நாடுகளிற்கூட இருந்து வந்தது. இத்தகைய எண்ணங்கள் எழக்காரணமென்ன? கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவில் எத்தனையோ பொதுநல சேவைகள் இயங்கி வந்தன என்பது உண்மையே. நாட்டின் கல்விப்பணியில் கத்தோலிக்க பாடசாலைகள் ஆற்றிவந்த சேவை யாவரு மறிந்ததே. வைத்தியசாலையில் கத்தோலிக்க கன்னியர் நோயாளருக்குச் செய்துவந்த தொண்டுகளை இன்றும் பலர் வாயாரப் புகழக் கேட்கிறோம். கத்தோலிக்கர்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனினும் பிறர் எம்மைப்பற்றி இத்தகைய கருத்துக்கள் கொண்டிருந்தமைக்கு நியாயம் இல்லாமலில்லை. திருச்சபை என்ன தொண்டுகளைச் செய்த போதிலும் அவை சமயத் தொண்டாகவே கருதிச் செய்யப்பட்டன. சமயத் தொண்டாகவே மதிக்கப்பட்டன. திருச்சபையின நலனே முதன்மையானதாகக் கருதப்பட்டு வந்ததால் பொதுநலனுக்குரிய எந்த விஷயத்திலாவது பிறமதத்தினருடன் ஒத்துழைப்பது மிகக் குறைவாகவே இருந்தது.

ஆனால், இன்றோ நிலைமை வெகுவாக மாறிவிட்டது. திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக கத்தோலிக்கரை சமூகத்தின் ஏனைய மக்களிடமிருந்து பிரித்து வைத்த கட்டுப்பாடுகள் தளர்ந்து, சமூகத்துக்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணி வலியுறுத்தப்பட்டு வருகிறது. திருச்சபையின் நலனையே நாடுவது ஒரு விதத்தில் சுயநலமானது என்றும், திருச்சபையின் வேலை பிறருக்குப் பணிபுரிவதே என்றும் தற்போது உணரப்பட்டு வருகிறது. மக்கள் பணியே நாட்டின் பணியாகும். நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்ட எந்த முயற்சியிலும் கிறிஸ்தவர் பிறமதத்தினரோடு ஒத்துழைப்பது அவசியமாகும். அதுமட்டுமல்லாது சில விடயங்களில் தாமே பிறருக்கு வழிகாட்ட வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். பொதுவாழ்வில் நீதியையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் நிலைநாட்ட புளிக்காரம் போல் சமூகத்தில் ஊடுருவிநின்று வழிகாட்ட வேண்டியது கிறிஸ்தவர் கடமையாகும். நாட்டில் ஆற்ற வேண்டிய பணிகளோ ஏராளமாக உள்ளன. வீடில்லாப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், வீதி விபத்துகள், குற்றமதிகரிப்பு—இவை போன்ற எத்தனையோ தொல்லைகள் நாட்டில் இருந்துவருகின்றன. அத்துடன் காலத்துக்குக் காலம் இயற்கையின் விளைவால் ஏற்படும் புயல், வெள்ளம ஆகியவற்றாலும் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. இத்துறைகளிலெல்லாம் நாம் ஆற்றக்கூடிய பணிகளுக்கு அளவேயில்லை. பெரியார் கென்னடி கூறியதுபோல் நாம் பெறக்கூடியது என்னஎன்று காத்திராமல் எம்மால் கொடுக்கக்கூடியது என்ன என்று சேவை செய்யக் காத்திருப்பதே கிறிஸ்தவ மனப்பான்மையாகும். ஊழியம் செய்யும் திருச்சபையின் அங்கத்தவர் கடைப்பிடிக்கவேண்டிய வழியுமாகும்.

# "நான் உங்களைச் சிநேகித்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரைச் சிநேகியுங்கள்."

**(பரி. அரு. 13-ம் அதி. 34-ம் வசனம்)**

நம் அன்பின் இரட்சகர் தம் அப்போஸ்தலருக்குக் கூறிய இனிமைபொருந்திய இவ்வாக்கியம், நம்மைப் பலவாறு சிந்திக்கச் செய்கிறது. ஏனெனில், இவ்வலிமை பொருந்திய இவ்வாக்கியம் சொல்லாலும், செயலாலும், கொடையாலும் பங்கிடப்பட்டு பூரணமாக்கப்பட வேண்டியது.

'சிநேகம்' என்னும் பல அர்த்தம்பொருந்திய இப்பதம் தெய்வத்திடம் பரிமாறப்படும்போது, பக்தி என்றும் பெற்றோர் பிள்ளைகளிடம் பாவிக்கப் படும்போது, அன்பு என்றும் சிநேகிதரிடம் கலந்துகொள்ளும்போது நட்பு என்றும், விவாகநிலையில் உறவாடும் போது காதல்என்றும் பலவித சொற்களாக மாற்றம் அடைந்து, சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப விவிதகருத்தைத் தருகிறது. வேதாகமத்தில் பொதுவாக அன்பு, சிநேகம் என்றசொற்கள் பாவிக்கப் படுவதை நாம் காணலாம். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள பக்தியை விளக்கும் அன்பு சிநேகம் என்னும் இப்பதங்கள், மனிதரைப் புனிதராக்கி, இறைவனிடம் பிதாவுக்குரிய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. எனவே பரி. சின்னப்பர், 1-ம் கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் எழுதுவதை நாம் அவதானித்தால், விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம் மூன்றும் நிலைத்திருக்கிறது. இவற்றில அன்பே பிரதானமானது என்பது விளங்கும்.

ஆதியில் மனிதனைப் படைத்த இறைவன் இறையாக்கினர் மூலம், அவனுடன் உரையாடி தமது அற்புதக் கிரிகைகளால் அவனை வழிநடத்தி, தமது அன்புக் கொடையாக இறைமகன் இரட்சகரையே முழுமையாகக் கையளித்தார். இக்கொடை இறைவன் நம்மட்டிலுள்ள சிநேகத்தின் அளவை நமக்கு வெளிப்படையாகக் காண்பிக்கின்றது. இவ்வருங்கொடையைப்பற்றி, பரி. அருளப்ப சுவிசேஷகர் தமது நற்செய்தியில், "தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்" என்று விளக்குகிறார். இறைவனைப் போலவே இறைமகனும் தமது சிநேகக் கற்பனைகள்மூலம் எண்பித்தார். பிறருக்குக் காட்டும் அன்பே இறையன்பு என்று நிரூபித்தார். "வருத்தப்பட்டுச் சுமை சுமக்கிறவர்களே என்னண்டை வாருங்கள், நான் உங்களை ஆற்றுவேன்" என்று போதித்துத் தமது அன்பைக் காட்டினார். குருடர் முடவர், வியாதிஸ்தர் போன்றோரைக் குணப்படுத்தி மரித்தோரை முதலாய் உயிர்ப்பித்து இவை போன்ற அற்புதக் கிரிகைகளால் தமது அன்பை வெளிப்படுத்தினார். பசித்திருந்தவர்களுக்கும் பலதடவைகளில் பசியாற்றி தமது அன்புக்கொடையால் திருப்திப்படுத்தினார். அன்றியும் மக்களின் ஆன்ம உணவாகிய திவ்விய நற்கருணையை, என்றும் அழியாத நிலையான சிநேக உணவாக ஊட்டி, தம்மையே இவ்வுலகின் மக்களுக்கு அர்ப்பணித்துவிட்டார். இத்துடன் அவரது சிநேகக் கொடை நின்றுவிடவில்லை. அவரது அன்பு சிநேகச் சுடர் விட்டு விண்ணரசைவிட்டு மண்ணுலகுவந்த பூரணநோக்கை நிறைவேற்றத் தம்மையே பலியாக்கிப் பரமபிதாவுடன் பரிந்துபேசி விண்ணரசின் பேரின்பப் பேற்றையே பெற்றுத் தந்துவிட்டார். இதைவிட மேலான கொடையும் இவ்வுலகில உண்டா?

இவ்வித அன்புச்செயலை அவரின் சாயலாகப் பிறந்த

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# அன்னையின் காணிக்கை

ஆறறுநூற் றைமூன்றுமலர் வாகை யோனும்
அருள்ஞானம் பொறையீகை அனைத்துமொன்ருய்
கூறரிய ஓர்வடிவா யுதித்த தென்னக்
கூன்பிறைதாள் விளங்குமரி யாளும்வானின்
பேறருளுந் திருமகனை நேர்ந் தெடுக்கப்
பெத்லேக மாநகரால் நாற்பதாம்நாள்
பேறுயரு மீரையாயிரம் வானோர் சூழ
பிரியமுடன் செருசேற்கு ஏகினரே.

●

வானவர்தம் தலைவியெனப் புகழ்ந்து போற்றும்
மாமரியாள் திருமகனை மார்போடேந்தி
தேனவிளு மலர்வாகை விரு தேந்தும்
செழுந்தவனே டாலயத்தே சேர்ந்தபோது
ஞானமிகு முனிவரதன் சிமியோன் வந்து
நளினமலற் பூங்கரத்தை நீட்டி வேண்டி
மானர்தமை மீட்கவந்த மனுவேல் தம்மை
மனமகிழ்வோ டாவலித்து முத்திசெய்தே

●

ஆர்வமுட னிவர்மானர் தம்மை மீட்டு
அருங்கதியிற் சேர்ப்பதற்குச் சிலுவைமீது
கோரமிகு வீனர்புரி வாதை யேற்றுக்
குனிந்துதலை கவிழ்ந்துஉயிர் பிரியும்போது
கூருரிய வியாகுலவா ளுனது மார்பை
உருவுமெனக் குருமுனிவன் தெளிந்துஞான
வாரமிகு சோபனமாய் வாழ்த் துரைத்து
பேரின்ப வாருதியின் மூழ்கினரே

●

பானுவேல் திருமகளாம் ஆனுள் வந்து
பாலகனை வேண்டியிரு கையிலேந்தி
மானர்பல ரிவர்பாடு படும்பே றடையா
மண்டுதீ யெழுநரகில் வீழ்வாரென்ன
ஞானமிகு தியானமுயர் காட்சி யாலே
நற்றவத்தி யார்வமுடன் புகழ்ந்துகூறும்
ஆனதொரு வாழ்த்துரையைக் கேட்டு எங்கள்
அன்னைமரி யாள்மிகவும் விம்மிஅழுதே

●

அழகுசெறி தூயவெண் புருவி ரண்டை
அம்பரர்க்குக் காணிக்கையாக வைத்து
உளமகிழ்ந்து திருமகனை மீட் டெடுத்து
உரியதவ முதியோர்தம் ஆசிபெற்று
வளம் பெருகு நசரேத்து என்னுமூரில்
வந்துதிரு ஞானவொளி விளங்குஞ்சோதி
விளம்பரிய தீபமென விளங்கி வாழ்ந்தார்
விண்ணுலகும் மண்ணுலகும் மகிழத்தானே

— பெரிய கட்டைக்காட்டுப் புலவர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆடு தை மீ 31ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. [illegible] "கத்தோலிக்க பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org